©
தமிழ்நாடு அரசு
2026

பதிவு எண் M-924

# வேலூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

எண் 6] வேலூர், வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 20, 2026.
மாசி 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு 2057.

## மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கை

ந.க.அ2/1495/2023, நாள் : 19-02-2026

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 4-ன் கீழ்
வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளரின் அறிவிக்கை
(ந.க.எண்:அ2/ 1495 / 2023, நாள்: 19-02-2026)

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், கீழ்கொத்தூர் கிராம ஊராட்சியிலுள்ள முத்துக்குமரன்மலை மற்றும் சின்னபுதூர் ஆகிய 02 குக்கிராமங்களை பின்னத்துரை என்ற கிராம ஊராட்சியுடன் இணைத்து கீழ்கண்ட விவரப்படி மறுசீரமைப்பு (Amalgamation) செய்து அரசாணை (நிலை) எண் 371, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா-2(1) துறை, நாள்:31-12-2025-ன்படி வெளியிடப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது.

மேற்படி வெளியிடப்பட்ட அரசாணைக்குறித்து நடத்தப்பட்ட கருத்து கேட்பு கூட்டத்தின் அடிப்படையிலும் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு ஆட்சேபனை மனு நிராகரிக்கப்பட்டும் அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டதின் அடிப்படையிலும் மேற்கண்ட அரசாணையில் மறுசீரமைப்பு செய்து வெளியிடப்பட்ட அறிவிக்கைக் குறித்து வேலூர் மாவட்ட அரசிதழில் இறுதி அறிவிக்கை வெளியிட அரசுக் கடித எண்.13112623/பரா.2(1)/2026-5, நாள்:18-02-2026-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31-12-2025 முதல் நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கீழ்காணும் விவரப்படி இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

**வேலூர் மாவட்டம் - அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்கொத்தூர் கிராம ஊராட்சியிலுள்ள 02 குக்கிராமங்களை பின்னத்துறை என்ற கிராம ஊராட்சியுடன் இணைத்தல்**

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | குக்கிராமங்கள் பிரிக்கப்படுவதற்கு முன் உள்ள கிராம ஊராட்சியின் பெயர் | கலம் 3-ல் உள்ள கிராம ஊராட்சியிலிருந்து பிரிக்கப்படும் குக்கிராமத்தின் பெயர் | கலம் 4-ல் உள்ள குக்கிராமம் இணைக்கப்பட உள்ள கிராம ஊராட்சியின் பெயர் | கலம் 5-ல் உள்ள ஊராட்சியுடன் இணைக்கப்பட்டபின் குக்கிராமங்களின் பெயர் | இறுதி ஆணை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | அணைக்கட்டு | கீழ்கொத்தூர் | 1.முத்துக்குமரன்மலை<br>2.சின்னப்புதூர் | பின்னத்துறை | 1.பொம்மன்கொட்டாய்<br>2.தானப்பன்கொட்டாய்<br>3.பின்னத்துறை<br>4. முத்துக்குமரன்மலை<br>5. சின்னபுதூர் | கீழ்கொத்தூர் கிராம ஊராட்சியில் உள்ள முத்துக்குமரன்மலை மற்றும் சின்னபுதூர் குக்கிராமங்கள் பின்னத்துறை கிராம ஊராட்சியுடன் இணைக்கப்படுகிறது |

வேலூர்,
2026 பிப்ரவரி 19.

வே.இரா. சுப்புலெட்சுமி,
*மாவட்ட ஆட்சித்தலைவர் /*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்,*
*வேலூர்.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.